'நன்மையை எதிர்பார்த்து ஒரு மனிதன் தனது குடும்பத்திற்கு செலவு செய்தால், அது தர்மமாக அமையும்'

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு
அவர்கள் கூறினார்கள் : 'நன்மையை எதிர்பார்த்து ஒரு மனிதன் தனது குடும்பத்திற்கு
செலவு செய்தால், அது தர்மமாக அமையும்'. [ஸஹீஹானது-சரியானது] [இருவரும் (இமாம் புஹாரியும் முஸ்லிமும்) ஒன்று பட்டது]

ஒரு மனிதர் தனது மனைவி, பெற்றோர் பிள்ளைகள் போன்ற தன்மீது செலவு கடமையான குடும்பத்தார்க்கு அல்லாஹ்வை நெருங்கி, அவனிடம் நன்மையை எதிர்பார்த்து செலவு செய்தால் அவருக்கு தர்மம் செய்த நன்மை கிடைக்கிறது என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்த ஹதீஸில் தெரிவிக்கிறார்கள்.

https://sunnah.global/hadeeth/ta/show/6460